THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, will the Government think of introducing English medium classes in villages also? When will the Government take steps to introduce that in villages ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரும் பாலும் தமிழ் மொழியிலே பாடம் சொல்லித்தரப்பட வேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதன் காரணமாக, எல்லாவிடங்களிலும் தமிழைப் பயிற்றுமொழி ஆக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்றியமையாத, தேவைப்படுகிற, அத்தியாவசியமான இடங்களிலே மட்டும்தான் ஆங்கிலத்திலே படிப்பதற்கு ஊக்கம் அளிக்கவேண்டும். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்கிற சூழ்நிலையை உருவாக்குகிற காரணத்தினால், அதற்கான அடிப்படையிலே திட்டங்கள் தீட்ட வேண்டும். இன்றியமையாத, தேவைப்படுகிற இடங்களிலே மட்டும், ஆங்கிலப் பயிற்சி மொழி முறை வரவேற்கப்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, it has become the established fact that students belonging to linguistic minorities study only in English medium. May I know whether this restriction will be removed at least with regard to linguistic minorities ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மொழிச் சிறுபான்மையினருக்கு ஆங்கில வகுப்பில் சேர்ந்து படிப்பதற்கான வசதி வாய்ப்புகள் செய்து கொடுக்கப்படுகின்றன. அவர்களது மொழியிலே படிப்பதற்கு சூழ்நிலை இல்லாதபோது, ஆங்கிலத்திலே படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

மாலைநேரக் கல்லூரி தமிழ்ப் பாடமொழி மாணவர்கள்

*3 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாலைநேரக் கல்லூரியில் தமிழ்ப் பாடமுறையை ஏற்றுப் படிக்கும் மாணவர்களுக்குப் பகல்நேரக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிக்கும் உதவித் தொகை கொடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாலைநேரக் கல்லூரிகளில் தமிழைப் பாடமொழியாக ஏற்றுப் படிக்கும் மாணவர்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக இடத்தை ஒதுக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எங்கெங்கே மாலைநேர வகுப்புகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் மாணவர்கள் சேர்க்கையைப் பொறுத்து பாடங்கள் வகுக்கப்படுகின்றன. அதிக மாணவர்கள் சேருகின்ற பி.ஏ. வகுப்புகளில், மாணவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்து புதிய வகுப்புகள் திறக்கப்படுகின்றன.

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, மாலைநேரக் கல்லூரிகளிலே இடம் கிடைத்தாலும், சில மாணவர்களுக்கு அந்தக் கல்லூரிக்கு அருகிலேயே உத்தியோகங்கள் மாற்றித் தரப்படாத காரணத்தால், அவர்களுக்குக் கல்லூரிக்குச் செல்வதிலே சில காலதாமதங்கள், கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை அரசு உணருமா? அதை மாற்ற முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது தனி முயற்சியிலே அவர்கள் செய்ய வேண்டிய ஒன்று. மாணவர்கள் வசதிக்காக இப்பொழுது மாலைநேரக் கல்லூரிகள் நடத்தப்படுகின்றன. அவர்கள் தங்கள் வசதிக்கேற்றபடி, அவர்களாக முயன்று உத்தியோகங்களை அருகில் மாற்றிக்கொள்ள வேண்டும். அவர்களாக அவர்களுக்கேற்ற முறையில் வகுப்புகள் இருக்கின்றனவா என்று பார்த்துக் கொள்ளவேண்டும். மாறுதல்கள் மூலமாக ஏற்படுகிற சங்கடங்கள் இல்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். கூடுமான வரையில், அந்த அந்த இலாக்காக்கள் உதவி செய்ய முடியுமே தவிர, கல்வி இலாகா, அவர்கள் இருக்கிற இடங்களுக்கு அருகாமையிலேயே மாலைநேரக் கல்லூரியைக் கொண்டு வர முடியாது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்தமாதிரி மாலைநேரக் கல்லூரிகள், காலைநேரக் கல்லூரிகளுக்குச் சென்று படிக்க முடியாமல் இருக்கிற, பண வசதி இல்லாமல் இருக்கிற மத்திய தர மாணவர்களுக்கு, காலையில் அலுவலகம் சென்று மாலையில் கல்லூரிக்குச் செல்ல வசதி செய்யப்படும் முயற்சியில் இருப்பதால், அவர்களுக்காக, எம்.ஏ. இலக்கியம் போன்ற மாலைநேர வகுப்புகளை அதிகமாக்கி, விரிவாக்க அரசாங்கம் முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எம்.ஏ. வகுப்பு நடத்த வேண்டுமென்ற விண்ணப்பங்கள் பல்கலைக் கழகங்களுக்கு வந்திருக்கின்றன. பல்கலைக் கழகங்கள் அதை ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. அதற்கான வசதி வாய்ப்புகள் ஏற்பட்ட பிறகு, அதற்கான முயற்சிகளைச் செய்யலாம் என்று பல்கலைக் கழகங்கள் சொல்லியிருக்கின்றன.